# சமய முன்னோடிகள்

## பன்னிரு திருமுறைகள்

சைவத் திருமுறைகள் என்பது பல்லவர் காலத்திலும், அதன் பின்னரும் தோன்றிய சைவ சமய நூல்களின் தொகுப்பாகும். இவை திருமுறைகள் என்று அறியப்படுகின்றன. இவை மொத்தம் 12 திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

பத்தாம் நூற்றாண்டில் ராஜராஜ சோழனின் ஆட்சியின் போது சிதம்பரம் கோயிலில் கவனிப்பாரற்று கிடந்த திருமுறைகள் கரையான்களால் அரிக்கப்பட்டு அழிந்தவைப் போக எஞ்சியவற்றை நம்பியாண்டார் நம்பி 11 திருமுறைகளாக தொகுத்தார்.

12–ஆம் திருமுறையான சேக்கிழார் எழுதிய பெரியபுராணம் பிற்காலத்தில் இரண்டாம் குலோத்துங்க சோழனால் சேர்க்கப்பட்டது. முதல் ஏழு திருமுறைகளுக்கு ‘மூவர் தமிழ்’ என்ற பெயர் உண்டு.

| திருமுறைகள் | ஆசிரியர்கள் |
|---|---|
| முதல் மூன்று திருமுறைகள் | திருஞானசம்பந்தர் |
| 4, 5, 6 – ஆம் திருமுறைகள் | திருநாவுக்கரசர் |
| 7–ம் திருமுறை | சுந்தரர் |
| 8–ம் திருமுறை | மாணிக்கவாசகர் |
| 9–ம் திருமுறை | ஒன்பதின்மர் ( திரு மாளிகை தேவர், சேந்தனார், கருவூர் தேவர், பூந்தொட்டி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணா தடிகள், திருவாழியமுதனார், (குருடோத்தமன் நம்பி, சேதிராயர்) |
| 10–ம் திருமுறை | திருமூலர் |
| 11–ம் திருமுறை | பன்னிருவர் ( திரு ஆலவாய் உடையார், காரைக்கால் அம்மையார், கையடிகள், காடவர் கோன், சேரமான் பெருமான், நக்கீரர், கல்லாட தேவன் ஆயினார், கபிலர், பரணர், இளம்பெருமான் அடிகள், அதிராவடிகள், பட்டினத்து பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி) |
| 12–ம் திருமுறை | சேக்கிழார். |

- பன்னிரு திருமுறைகளின் ஆசிரியர்கள் – 27 பேர்
- பன்னிரு திருமுறைகளின் நூல்கள்– 76
- பன்னிரு திருமுறைகளில் திருஞானசம்பந்தர் அருளிய முதல் மூன்று துறைகளும் ‘**திருக்கடைக்காப்பு**’ எனப்படுகின்றன.
- திருநாவுக்கரசர் அருளிய 4, 5, 6 ஆம் திருமுறைகளும் ‘**அப்பர் தேவாரம்**’ எனப்படுகின்றன.
- சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறை ‘**திருப்பாட்டு**’ எனப்படுகிறது.
- மாணிக்கவாசகர் அருளிய எட்டாம் திருமுறை ‘**திருவாசகம்**’ ‘**திருக்கோவையார்**’ எனப்படுகின்றன.
- ஒன்பதின்மர் அருளிய ஒன்பதாம் திருமுறை ‘**திருவிசைப்பா**’ மற்றும் ‘**திருப்பல்லாண்டு**’ எனப்படுகின்றன.
- திருமூலர் அருளிய பத்தாம் திருமுறை ‘**திருமந்திரம்**’ எனப்படுகிறது.
- பன்னிருவர் அருளிய 11–ம் திருமுறை ‘**பிரபந்தம்**’ எனப்படுகின்றன
- சேக்கிழார் அருளிய 12–ம் திருமுறை ‘**திருத்தொண்டர் புராணம்**’ ( பெரியபுராணம்) எனப்படுகிறது.

## தேவாரம்

- ‘**தேவாரம்**’ என்பது சைவ சமயத்தின் முழு முதல் கடவுளான சிவபெருமான் மீது திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் ஆகிய மூவரால் பாடப்பெற்றது.

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஏழாம் நூற்றாண்டை சார்ந்தவர்கள்.
- சுந்தரர் எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.
- தேவார பாடல்கள் பதிக வடிவில் பாடப்பட்டுள்ளன. பதிகம் என்பது பத்து பாடல்கள் கொண்டது.
- தே + ஆரம் – தேவாரம் என பிரித்து இறைவனுக்கு பாமாலை என்று சிலரும், தே + வாரம் தேவாரம் இறைவனிடத்தில் அன்பை விளைப்பது என்று சிலரும் கூறுவர்.
- ஆரம் – மாலை ; வாரம் – அன்பு

**கிடைத்துள்ள பதிகங்கள்**

- ஏட்டுச்சுவடியில் கிடைத்தவாறு சம்பந்தர் பதிகங்களின் எண்ணிக்கை 383. பின்னர் திருவிடைவாய் என்ற தலத்துக் கல்வெட்டு ஒன்றினால் அறியப்பட்டது ஒரு பதிகம். எனவே அவர் பதிகங்கள் 384.
- திருநாவுக்கரசர் பதியங்கள் 312 மட்டுமே கிடைத்துள்ளன.
- சுந்தரர் பதிகங்கள் 100 மட்டுமே கிடைத்துள்ளன.

## திருஞானசம்பந்தர்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | சம்பந்தன் |
| **பிறந்த இடம்** | சீர்காழி |
| **குளம்** | அந்தனர் |
| **பெற்றோர்** | சிவபாத இருதயர் – பகவதி அம்மையார் |
| **தத்துவம்** | சைவ பக்தி |

- திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் என்றால் **'அறிவுசேரர்'** என்று பொருளாகும்.
- இவர் கி.பி. 7–ம் நூற்றாண்டில் சீர்காழி என்ற ஊரில் அந்தணர் மரபில் கவுணியர் குடும்பத்தில் பிறந்தார்.
- இவர் மூன்று வயது குழந்தையாக இருந்த போது, தந்தையருடன் கோயிலுக்கு சென்றார்.அங்கே குழந்தையை கரையில் அமர்த்தி விட்டு குளிக்கச் சென்ற தந்தையார், சிறிது நேரம் நீரில் மூழ்கி இருந்த சமயம், தந்தையை காணாத குழந்தை அம்மை,அப்பா என்று கூறி அழுதார்.
- அப்போது உமாதேவியார் சிவபெருமானுடன் இவர் முன் காட்சி கொடுத்து, ஞான பாலூட்டியதாக சொல்லப்படுகிறது. குளித்துவிட்டு வெளியே வந்த தந்தையார் பிள்ளையின் வாயிலிருந்து பால் வடிவதை கவனித்து, அதை குறித்து கேட்கவே கோயிலுள்ள இறைவனை சுட்டிக்காட்டி தோடுடைய செவியன் என்று தொடங்கும் தனது முதல் தேவாரத்தை திருஞானசம்பந்தர் பாடினார்.
- சம்மந்தர் பாடிய தளங்களில் முக்கியமான தளம் மேல கடம்பூர் அமிர்தகடேஸ்வரர் கோயில் ஆகும். இக்கோயிலை அவர் கரைக்கோயில் என பாடியுள்ளார். ஆச்சாள்பூர கல்வெட்டு தகவலின் படி சம்பந்தரின் பெயர் சொக்கியர்.
- பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் வரலாறு அதிகமான பாடல்களை பெற்று உள்ளது. எனவேதான் பெரிய புராணத்தை பிள்ளை பாதி புராணம் பாதி என்று கூறும் வழக்கம் ஏற்பட்டது.
- இவர் ஆளுடைய பிள்ளை என்றும் அழைக்கப்பட்டார் பதியங்கள் எண்ணிக்கை 383 பின்னர் திருவிடவாய் என்ற தளத்து கல்வெட்டு ஒன்றினால் அறியப்பட்டது திருடவாய் பதிகம் ஒன்று எனவே கிடைத்துள்ள பதிகங்கள் 384.

**அற்புதங்கள்**



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- திருக்கோலாக்காவில் பொற்றாளம் பெற்றார்.
- திருநெல்வாயில் அறத்துறையில் முத்துச்சிவிகை, குடை மற்றும் திருச்சின்னங்கள் பெற்றார்.
- திருப்பாச்சிலாச் சிரமத்தில் கொல்லிமழவன் மகளுக்கு உண்டான முயலகன் என்ற நோயை நீக்கினார்.
- திருப்பட்டீச்சரத்தில் முத்து பந்தரும், திருவாடுதுறையில் பொற்கிழியும், திருவிழிமிழலையில் படிக்காசும் பெற்றார்.
- திருமருகலில் அரவு தீண்டிய வாணிகனை உயிர்ப்பித்தார்.
- திருமறை காட்டில் திருக்கதவு அடைக்க பாடினார்.
- மதுரையில் பாண்டிய மன்னனின் கூனை நிமர்த்தி நின்றசீர் நெடுமாறன் ஆக்கி அவனை தமிழ்நாட்டில் இருந்து சைவ சமயத்திற்கு மாற்றினார்.
- சமணருடன் செய்த அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றில் நின்று சைவம் , தமிழ் ஆகியவற்றின் பெருமையை நிறுவினார்.
- திருவோத்தூரில் ஆண் பனையை பெண் பனையாக்கி கனிகள் தருமாறு செய்வித்தார்.
- திருமயிலையில் எழும்பை பெண்ணாக்கினார்.
- திருநல்லூரில் நம்பியாண்டர் நம்பி என்பவர் தம் மகளை தம் 16–ஆம் வயதில் மணந்து அவ்வூர் திருக்கோயிலில் தம் மனைவியாரோடும் திருமணத்திற்கு வந்து இருந்தாரோடும் வைகாசி திங்கள் மூல நன்னாளில் சோதியிற் கலந்தார். இவரும் திருநாவுக்கரசரும் சமகாலத்தவர்.

## திருநாவுக்கரசர்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | மருள்நீக்கியார் |
| **பெற்றோர்** | புகழானார் – மாதினியர் |
| **தமக்கை** | திலகவதியார் |
| **பிறந்த ஊர்** | திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூர் (தென் ஆற்காடு மாவட்டம்) |
| **தத்துவம்** | பக்தி நெறி, தொண்டு நெறி |

- பெயர்கள் நாயன்மார்களில் பல்வேறு பெயர்களைக் கொண்டவர் இவர்.
- இவர் சிறிது காலம் சமண சமயத்தைத் தழுவி இருந்தபோது ‘தருமசேனர்’ என்ற பெயர் பெற்றார்.
- சமண சமயத்தில் இருந்து சைவத்திற்கு இவரை மாற்ற எண்ணிய இறைவன் இவருக்கு சூலை நோயை கொடுத்தார்.சூலை நோய் நீங்க தமக்கையாரின் அறிவுரைப்படி அதிகை வீரட்டானக் கோயிலுக்குச் சென்று கூற்றாயினவாறு விலக்கிலீர் என்ற பதிகத்தை பாடி சிவபெருமானை வணங்கினார். பாமாலை செவி மடுத்த இறைவன் இவரின் சூழல் நோயை நீக்கி நாவுக்கரசு என்று பெயரை வழங்கினார்.
- இவரை இறைவன் ஆட்கொண்டதால் ஆளுடைய அரசு என்று அழைக்கப்பட்டார்.
- திருஞானசம்பந்தர் இவரை அப்பர் என்று அழைத்தமையால் அப்பர் என்ற பெயரை பெற்றார்.
- சிவாலயங்களை தூய்மை செய்யும் பணியை மேற்கொண்டதால் உழவாரத் தொண்டர் என்ற பெயரை பெற்றார்.
- **தாண்டகம்** எனும் விருத்த வகையை பாடியமையால் **தாண்டக வேந்தர்** என்னும் பெயர் பெற்றார்.

### அற்புதங்கள்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- சமண சமயத்தை சேர்ந்த முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் திருநாவுக்கரசரை பலவிதங்களில் துன்புறுத்தினான். அத்துன்பங்களை இறைவன் அருளால் வென்று, மன்னனையும் சைவத்திற்கு மாற்றினார்.
- இறைவன் அருளால் துன்பங்களில் இருந்து மீண்டதை கற்றுணை பூட்டியோர் கடலினுள் பாய்ச்சினாலும் நற்றுணை ஆவது நமச்சிவாயமே என்று தனது பதிகத்தில் பதிவு செய்துள்ளார்.
- சமணர்களால் ஏழு நாட்கள் சுண்ணாம்பு காலவாயில் அடைத்து வைத்திருந்தும் வேகாது உயிர் பிழைத்தார்.
- சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டும் சாகாது உயிர் பிழைத்தார்.
- சமணர்கள் விடுத்த கொலை யானை இவரை வலம் வந்து வணங்கிச் சென்றது.
- சமணர்கள் கல்லில் இவரைச் சேர்த்து கட்டி கடலில் விடவும் அக்கல்லே தோணியாக கரை ஏறியது.
- சிவபெருமானிடத்தே திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றார்.
- வேதாரணியத்தில் (திருமறைக்காடு) திருக்கதவு திறக்க பாடினார்.
- பெண்ணாகடத்தில் சூலமும், இடபமும் ஆகிய குறிகளை தம்மேனியில் பொறிக்கும்படி இறைவனை வேண்டி அவ்வாறு அக்குறிகள் இடப்பெற்றார்.
- திங்களூர் அப்பூதியடிகளின் மகனை அரவந்தீண்டிய போது நஞ்சு நீக்க ஒன்றுகொலாம் என்ற பதிகத்தை பாடி அவனை உயிர்ப்பித்தார்.
- காசிக்கு அப்பால் உள்ள ஒரு தடாகத்தின் உள்ளே மூழ்கி திருவையாற்றிலே ஒரு வாவியின் மேலே தோன்றிக் கரையேறினார்.
- தமது 81 வது வயதில் திருப்புகலூரில் சித்திரை சயத நாளில் உயிர் நீத்தார்.
- பதிகங்கள்
- இவர் 49,000 தேவார பதிகங்களைப் பாடியுள்ளார்.
- இவர் தாள அமைப்புடன் பாடிய பதிகங்கள் பண்ணாங்க பாடல்கள் எனவும் தாளமைப்பு இல்லாத பாடல்கள் சுத்தாங்க பாடல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.
- திருத்தாண்டகம், திருவிருத்தம், திருகுறுந்தொகை ஆகியவை நாவுக்கரசர் பாடிய சுத்தாங்க பாடல்கள் ஆகும்.

**இவர் பாடல்களில் காணப்படும் பண்கள் (10)**

| | |
|---|---|
| 1. கொல்லி | 2. பழந்தக் காரகம் |
| 3. காந்தாரம் | 4. பழம் பஞ்சுரம் |
| 5. பியந்தை காந்தாரம் | 6. இந்தளம் |
| 7. சாதாரி | 8. சீகாமரம் |
| 9. காந்தார பஞ்சமம் | 10. குறிஞ்சி |

**முக்கியத்தலம்**

- இவர் பாடிய தலங்களில் முக்கியமான தலம் **'மேலக்கடம்பூர் அமிர்தகடேஸ்வரர் கோயில்'** ஆகும்.
- இங்குதான் அவர் **'என் கடன் பணி செய்து கிடப்பதே'** என்னும் வரிகளை பாடி அருளினார்.

## சுந்தரர்

| | |
|---|---|
| **இயற்பெயர்** | நம்பியாரூரன் |
| **பெற்றோர்** | சடையனார் – இசைஞானியர் |
| **குளம்** | ஆதிசைவர் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | |
|---|---|
| **பிறந்த ஊர்** | திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலுார் |
| **சிறப்பு பெயர்கள்** | ஆளுடைய நம்பி, வன்றொண்டன் |
| **தத்துவம்** | சக மார்க்கம் |

- சுந்தரர் என்ற பெயர் சிவபெருமானால் இவருக்கு சூட்டப்பட்டதாகும்.
- திருமுனைப்பாடி அரசர் நரசிங்க முனையார் இவரை தத்துப் பிள்ளையாக தமது அரண்மனையில் வைத்து வளர்த்தார்.
- மணப்பருவம் அடைந்தபோது சிவபெருமான் முதியவர் வடிவத்தில் வந்து சுந்தரனுடைய பாட்டனார் எழுதிக் கொடுத்ததாக கூறி ஓர் ஓலையை காட்டி சுந்தரரும் அவரது வழி தோன்றல்களும் தனக்கு அடிமை என்றார். திருமணம் அதனால் தடைப்பட சுந்தரரை அழைத்துக் கொண்டு கோயிலுள் சென்ற முதியவர் மறைந்து சிவபெருமானாக காட்சியளித்தார். இறைவனே வந்து தன்னை தடுத்தாட்கொண்டதை உணர்ந்த சுந்தரர் 'பித்தா பிறைசூடி பெருமானே' என்று தனது முதல் பதிகத்தை பாடினார்.
- இறைவன், சுந்தரருக்கு நண்பனாக விளங்கினார். இவருடைய பக்தி சக மார்க்கம் என்று சொல்லப்படுகின்ற தோழமை வழியை சார்ந்தது. இறைவனால் 'வன்றொண்டன்' என அழைக்கப்பட்டார்.
- திருவாரூரில் 'பரவையார்' என்ற பெண்ணை மணந்து கொண்டார். திருவெற்றியூரில் சங்கிலியார் என்ற பெண்ணை மணந்து கொண்டார்.
- சேர அரசரான சேரமான் பெருமாள் இவருடைய நண்பர் ஆவார். சுந்தரர் தனது பதினெட்டாவது வயதில் சிவனடி சேர பதிகம் பாடினார். சிவபெருமான் சுந்தரருக்காக வெள்ளை யானையை அனுப்ப, அதில் ஏறி கைலாயம் சென்றார். அங்கு அவருக்கு சிவபெருமானும் பார்வதியும் முக்தி அளித்தனர். முக்தி அடைந்த நாள் ஆடி திங்கள் சுவாதி நாளாகும்.

### அற்புதங்கள்

- திருப்புகலூரில் செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டது.
- சிவபெருமான் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாச்சலத்தில் உள்ள நதியில் போட்டு திருவாரூர் குளத்தில் எடுத்தது.
- திருவையாற்றில் காவிரி ஆற்றை பிரிந்து வழிவிடச் செய்தது.
- அவினாசியில் முதலை விழுங்கிய குழந்தையை, அம்முதலையின் வாய் நின்று உயிருடன் மீட்டுக் கொடுத்தது.
- ஊடல் கொண்ட பரவையாரிடம் சிவபெருமானை இருமுறை தூதாக அனுப்பினார்.

## மாணிக்கவாசகர்

| | |
|---|---|
| **பிறந்த ஊர்** | மதுரை மாவட்டத்திலுள்ள மேலுாருக்கு அருகில் உள்ள திருவாதவூர். |
| **பெற்றோர்** | சம்புபாத சரிதர்– சிவஞானவதி |
| **காலம்** | 9–ம் நூற்றாண்டு |
| **பணி** | அரிமர்த்தனப் பாண்டியனிடம் அமைச்சராக பணியாற்றினார். |
| **இயற்றிய நூல்கள்** | திருவாசகம், திருக்கோவையார், திருவெம்பாவை |
| **சிறப்பு பெயர்கள்** | திருவாதவூரார், அழுது அடியடைந்த அன்பர், அருள் வாசகர், தென்னவன், பிரம்மராயன், ஞானநெறி. |

- இவர் ஏற்றிய திருவாசகத்தின் பெருமையை **திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்** என்ற கூற்றால் அறியலாம்.
- பாண்டியனுக்காக குதிரை வாங்க சென்றபோது திருப்பெருந்துறை

www.tnpscgroup4.in

இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். அவ்விறைவனை, மெய்யுருகப் பாடிக் கசிந்து கண்ணீர் மல்கி அழுது தொழுதவர். அதனால் இவரை **அழுது அடியடைந்த அன்பர்** என்பர்.

- இறைவனுக்காக திருப் பிறந்துறையில் கற்கோயில் ஒன்றை கட்டியுள்ளார்.
- **கோவை பாடிய வாயால் பாவை படுக** என்று இறைவன் ஆணையிட்டதால் திருவெம்பாவை என்ற நூலை இயற்றினார்.
- 32 ஆண்டுகள் வாழ்ந்த இவர் ஆனி மகத்தில் சிதம்பரத்தில் முக்தி அடைந்தார்.

**அற்புதங்கள்**

- சிவபெருமான் நரியை பரியாக்கிய திருவிளையாடலும், பிட்டுக்காக மண் சுமந்த திருவிளையாடலும் மாணிக்கவாசகருக்காக நடத்தியது.
- பிறவியிலிருந்து ஊமையாய் இருந்த பெண்ணை பேச வைத்தது.
- தம்முடைய திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து எழுதும் பேறு பெற்றுக் கொண்டது.
- எல்லோரும் காணும் படியாக திருச்சபையில் உள்ளே புகுந்து சிவனோடு கலந்தது.
- திருவாசகம் 51 பகுதிகளையும், 658 பாடல்களையும் கொண்டுள்ளது.
- சிவபுராணம், கீரத்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் என்னும் நான்கு பெரும் பகுதிகள் திருவாசகத்தில் உள்ளன.
- இந்நூலில் 38 சிவத்தலங்கள் பாடப் பெற்றுள்ளன.
- ஜி.யு.போப் திருவாசகம் முழுமையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- மனிதன் தெய்வத்திடம் கூறியது திருவாசகம்: தெய்வம் மனிதனுக்கு கூறியது பகவத் கீதை: மனிதன் மனிதர்களுக்கு கூறியது திருக்குறள் என்றொரு மூதுரையும் தமிழில் உள்ளது.

✓ **<u>ஜி.யு.போப் அவர்களின் கூற்று</u>**

- "உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரை விட புலமை, உழைப்பு, துன்பத்தை பொறுத்தல், இடையறா நிலைத்த பக்தி ஆகிய பண்புகளுடன் நம் மனத்தை கவர்கின்றவர் வேறு யாரும் இல்லை."

## <u>திருமூலர்</u>

| | |
|---|---|
| இயற்பெயர் | மூலன் |
| குளம் | இடையர் |
| அவதாரத்தலம் | சாத்தனூர் |
| முக்தி தலம் | திருவாவடுதுறை |

- திருமூலர் என்பவர் 63 நாயன்மார்களில் ஒருவரும், பதினெண் சித்தர்களுள் ஒருவரும் ஆவர்.
- நம்பியாண்டர் நம்பிகள் தனது திருத்தொண்டர் திருவந்தாதியில் திருமூலர் வரலாற்றைச் சுருக்கமாய்க் கூறியுள்ளார். இவர் அருளிய திருமந்திரமாலை பத்தாவது திருமுறையாக அமைந்துள்ளது.
- திருக்கையிலாயத்தில் சிவபெருமானது திருக்கோவிலுக்குக் காவல் இருந்த திருநந்திதேவரது திருவருள் பெற்ற மாணாக்கருள், அட்டமா சித்திகளும் கைவிர பெற்ற சிவயோகியார் ஒருவர் அகத்தியருடன் சில காலம் தங்குவதற்காக பொதியமலையை நோக்கிச் சென்றார்.
- செல்லும் வழியில் காவிரி கரையில் உள்ள சோலையின் அருகே பசு கூட்டங்கள் கதிரி



www.tnpscgroup4.in

அழுவதை கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே தொன்று தொட்டு ஆநிரை மேய்க்கும் குடியில் பிறந்த ஆயனாகிய மூலன் என்பவன் விடம் தீண்டி இறந்தமையால் அதனை தாங்காத பசுக்கள் உயிர் நீத்த அவனது உடம்பினை சுற்றி நின்று கொண்டு கதறின.

- பசுக்களின் துயரத்தை நீக்க விரும்பிய சிவயோகியார், கூடுவிட்டு கூடு பாய்தல் என்ற வழியில் இடையனின் உடலில் தனது உயிரை செலுத்தி திருமூலராய் எழுந்தார். பசுக்கள் துயரம் நீங்கி அன்பினால் அவரது உடம்பினை மோந்து மகிழ்ந்தன.
- பின்னர் சில நாட்கள் கழித்து தம் உடம்பினை பத்திரமாக வைத்த இடத்திற்கு சென்று பார்த்தார். ஆனால் அவர் உடல் அங்கு இல்லை.
- மண்ணுலகில் வாழும் உயிர்களிடத்தே பெருங்கருணை வைத்த சிவபெருமான், சிவாகமங்களில் அரும்பொருள்களை தமிழ் மொழியில் திருமூலரது வாக்கினால் வகுத்துரைக்க எண்ணி, திருமூலரின் பழைய உடலை மறைத்து வைத்தார். இந்த உண்மையை அறிந்து கொண்ட திருமூலர், அவ்விடம் விட்டு அகன்று திருவாவடுதுறை கோயிலை அடைந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நன்னெறிகளும் அடங்கிய திருமந்திர நூலை யாத்து இறைவன் திருவடியில் சமர்ப்பித்தார்.
- திருமந்திரத்தில் 3000 பாடல்கள் உள்ளன. இந்நூல் தமிழ் மூவாயிரம் எனவும் வழங்கப்பெறும். ஒன்றே குலம் ஒருவனே தேவன், அன்பே சிவம் என்பவை இந்நூலின் புகழ்பெற்ற சொற்றொடர்கள் ஆகும்.
- இந்நூல் ஒன்பது தந்திரங்களைக் (இயல்கள்) கொண்டது.
- 1, 92,000 சொற்களைக் கொண்டது. இந்நூல் சைவ ஆகமம் என்று போற்றப்படுகிறது.
- ‘தோத்திரத்திற்கு திருவாசகம்’ ‘சாத்திரத்திற்கு திருமந்திரம்’ என்பது சான்றோர் வாக்கு.
- சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாக இந்நூல் கருதப்படுகிறது.
- காரைக்கால் அம்மையார்
- மூன்று பெண் நாயன்மார்களில் ஒருவரும் முதன்மையானவரும் ஆவார். கயிலை மலையின் மீது கைகளால் நடந்து சென்றவரை சிவபெருமான் அம்மையே என்று அழைத்ததாலும், காரைக்கால் என்ற மாநகரிலே பிறந்தவர் என்பதாலும், காரைக்கால் அம்மையார் என அழைக்கப்படுகிறார்.
- இவர் இசை தமிழால் இறைவனை பற்றி முதன்முதலாக பாடியவரும், தமிழுக்கு அந்தாதி எனும் இலக்கண முறையை அறிமுகம் செய்தவரும் ஆவார்.
- 11–ம் திருமுறையில் இவர் இயற்றிய அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திரு இரட்டை மணிமாலை ஆகியவை அமைந்துள்ளன. இவர் சைவத்தமிழுக்கு பெரும் தொண்டாற்றியுள்ளார். இவருடைய பதிக முறைகளை பின்பற்றியே பிற்காலத்தில் தேவாரப் பதிகங்கள் இயற்றப்பட்டன.
- இவர் ‘காரைவனம்’ என்று முன்பு அழைக்கப்பட்ட காரைக்கால் மாநகரில் தனதத்தன் – தர்மவதி தம்பதியருக்கு மகளாகப் பிறந்தார். இவரது இயற்பெயர்

புனிதவதி. சிறுவயதில் இருந்தே சிவன் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார்.

- பரமத்தத்தன் என்ற வணிகருக்கு இவரை மணமுடித்துக் கொடுத்தனர். ஒருமுறை தன் கணவன் கொடுத்து அனுப்பிய இரு மாங்கனிகளில் ஒன்றை சிவனடியாருக்கு கொடுத்து விட்டார். மற்றொன்றை கணவனுக்கு கொடுத்தார் மாங்கனியின் சுவை நன்றாக இருக்கவே, மற்றொரு கனியையும் கொண்டு வருமாறு கணவன் கூற செய்வதறியாது திகைத்த அம்மையார் சமையலறைக்குச் சென்று இறைவனிடம் வேண்டினார்.
- இறைவன் அருளால், அம்மையாரின் கையில் ஒரு மாம்பழம் தோன்றியது. மகிழ்ச்சியுடன் கணவருக்கு அதை கொடுத்தார். முன்பு உண்ட கனியை விட இக்கனி அதிக சுவையுடன் இருக்கவே, பரமதத்தன் காரணத்தை கேட்டார். நடந்ததை அம்மையார் கூற பரமதத்தன் அதனை நம்பவில்லை. கணவனின் சந்தேகத்தை நீக்குவதற்காக அம்மையார் இறைவனிடம் வேண்டி நிற்க, மீண்டும் ஒரு கனியை இறைவன் கொடுத்தார். அதை கண்டு வியந்த பரமதத்தன் அவரை தெய்வப் பெண்ணாக எண்ணி, தான் உடன் வாழ்வது தகாது என்று அம்மையாரை விட்டு வேறு ஊருக்குச் சென்று விட்டார்.
- கணவனுக்காக சில காலம் காத்திருந்த அம்மையார், கணவன் மதுரை மாநகரில் வேறு பெண்ணை மனம் செய்து வாழ்கிறார் என அறிந்தவுடன், இறைவனை வேண்டி இளமை வடிவம் நீங்கி எல்லோரும் வணங்கும் சிவபூதகண வடிவத்தை பெற்றார்.
- இறைவன் உறையும் கையிலாய மலையில் தன் கால்கள் படலாகாது என்று கைகளால் நடந்து சென்றார். அதனால் இவரை அம்மையே என்று விழித்து வேண்டுவன கேள் என்றார். அதற்கு அம்மையார்;

பிறவாமை வேண்டும், மீண்டும்
பிறப்புண்டேல், இறைவா
உனையென்றும் மறவாமை வேண்டும்
இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அரவா நீ ஆடும் போது உன்
அடியின் கீழ் இருக்க.

- என்றார். அவ்வாறே அருளிய இறைவன் அவருக்கு தன் திருத்தாண்டவம் காட்டி, திருவாலங்காட்டிற்கு வர பணித்து, தன் திருவடிக்கீழ் என்றும் இருக்க அருளினார்.
- இவர் இசை தமிழின் அன்னை என போற்றப்படுகிறார். இவர் பாடிய பதிகங்கள் மூத்த பதிகங்கள் எனப்படுகின்றன.
- காரைக்கால் அம்மையாரின் சிறப்புகளை நினைவு கூறும் வண்ணம், காரைக்கால் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதம், பௌர்ணமி அன்று மாங்கனி திருவிழா நடைபெறுகிறது.

**<u>சிறப்புகள்</u>**

- சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பட்டார். இவருக்காக காரைக்காலில் தனிக்கோயில் உள்ளது.
- 63 நாயன்மார்களில் அமர்ந்த கோலத்தினை கொண்டவர். மற்ற நாயன்மார்கள் நின்ற கோலத்தில் இருப்பர். அந்தாதி, மாலை என்ற சிற்றிலக்கிய வகைகளை தோற்றுவித்தவர்.
- திருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையார் தங்கியமையால் அத்தலத்தில் ஞானசம்பந்தர் கால் பதிக்க தயங்கினார். அம்மையாரின் பாடல்கள் மட்டுமே மூத்த திருப்பதிகம் என்று போற்றப்படுகிறது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in